Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.423/2023 Date:09.09.2026
Deposition of witness for prosecution: PW2 ( LW 12 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. ஜெயராணி | Village | உத்தமபாளையம் |
| Father/ Husband Name | மரியவிக்டர் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 53 /2026 | Calling | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 09.09.2026. TIME 11.40 AM

2–வது எதிரி ஆஜர். 1, 3–வது எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி பிஎன்எஸ்எஸ் பிரிவு 348ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் தற்போது உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்து மற்றும் வழக்கின் மேல் விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த ஆய்வாளர் மங்கையர்திலகம் அவர்கள் பணிமாறுதாலகி சென்றுவிட்டதாலும், அவரது கையொப்பம் எனக்கு பரீட்சியம் ஆகும் என்பதாலும் ஆவணங்களை பாா்த்து என்னால் சாட்சியம் அளிக்க இயலும். 07.08.2022ம் தேதி 12.00 மணிக்கு சாா்பு ஆய்வாளர் நிலையப் பொறுப்பிலிருந்தபோது நிலையத்தில் ஆஜராகி முருகன் மகள் நவீனா என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 498(A), 342, 506(1) இதச கீழ் குற்ற எண் 20/22 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார், பின்னர் அன்றைய தினமே 01.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் சென்று பாா்வையிட்டு சாட்சிகள் கபிலன், சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் பாா்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் தனிதனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை என தெரியவந்ததால் வழக்கின் எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. வழக்கு விசாரணை முடித்து ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்த பிரிவு படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். புகார் **அ.சா.ஆ.2**, முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**, பாா்வை மகஜர் **அ.சா.ஆ.4**, வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த சந்தேகத்தின் பேரிலான புகாரினை சரியாக விசாரணை செய்யாமல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம்

செல்லாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

| |
|---|
| சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார். ஒம்/திரு.P. காமராசு<br>நீதித்துறை நடுவர்,<br>உத்தமபாளையம். |

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.24 /2019 Date:29.07.2026
Deposition of witness for prosecution: PW 7 ( LW 12 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.வினிதா | Village | சென்னை |
| Father/ Husband Name | தினேஷ்குமார் | Taluk | சென்னை |
| Age | 36 /2026 | Calling | மருத்துவர் - |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 29.07.2026. TIME 11.55 AM

2–வது எதிரி ஆஜர். 1–வது எதிரி ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மருத்துவ மேல் படிப்பு படித்துக்கொண்டிருக்கிறேன். கடந்த 04.08.2018 ம் தேதி உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது, காலை 11.55 மணியளவில் உத்தமபாளையம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடம் இருந்து, பெண் காவலர் 1969 திருமதி. மீனா என்பவர் மூலம் வரப்பெற்ற வேண்டுகோள் விண்ணபத்தின் அடிப்படையில் குற்ற எண் 324/18, பிரிவு 279, 337, 304(A) இதச வழக்கில் மேரியம்மாள் என்பவரின் பிரேதத்தின் மீது உடற்கூறாய்வு மேற்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டது அதன் அடிப்படையில் அன்றைய தினமே 12.30 மணிக்கு மேற்படி மேரியம்மாள் என்பவரின் பிரேதத்தின் மீது உடற்கூறாய்வு மேற்கொண்டு, உடற்கூறாய்வு சான்றிதழ் வழங்கினேன். பிரேதத்தின் வலது, இடது காதுகளில் இரத்தம் வழிந்த நிலையிலும், இடது பக்க தலை பகுதியில் துளை ஏற்பட்ட காயம் 2x2xcm அளவில் இருந்தது, இடது கை புஜத்தில் சிராய்ப்பு காயம் இருந்தது, வயிற்றின் மேற்பகுதியில் இரத்தகட்ட 4x3x cm அளவில் இருந்தது, பின்முதுகு இடுப்பு கீழ் பகுதியில் முழுவதும் சிராயப்பு காயம் இருந்தது. வலது கால் மொலியில் 3x1cm அளவில் சிராயப்பு காயம் இருந்தது, இடது காலில் 1x1 cm அளவில் இருந்தது, வலது கால் பாதம் முன்பகுதியில் 2x3 cm சிராயப்பு இருந்தது, உட்பகுதி உடற்கூறாய்வில் மூளையின் இடது பக்கத்தில் இரத்தம் 2x1 cm அளவில் இரத்தம் தேக்கி இருந்தது, வலது மற்றும் இடது வரிசி எலும்புகள் 2, 3, 4, 5, 6 முறிவு ஏற்பட்டியிருந்தது. இரண்டு பக்க நுரையீரல்களிலும் 3x3x cm அளவில் இரத்தம் தேக்கி இருந்தது. கல்லீரல் 3x1x1 cm அளவில் கிழிந்த நிலையில் இருந்தது, மண்ணீரல் 4x1x1 cm அளவில் கிழிந்த நிலையில் இருந்தது. மேற்படி உடற்கூறாய்வு மதியம் 01.30 மணியளவில் முடித்தேன். மேலும் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களில் தலை மற்றும் விலா எலும்பின் முறிவினாலும் அதிக இரத்த போக்கு ஏற்பட்டு, திடிர் இருதய அடைப்பு ஏற்பட்டு, இறந்து போகியுள்ளார் என பிரேத பரிசோதனை சான்று வழங்கினேன். மேலும் பிரேதமானது 20–22

மணிநேரத்திற்கு முன்னதாக இறந்துயிருக்க கூடும் என உடற்கூறாய்வு சான்று வழங்கினேன். உடற்கூறாய்வு சான்று **அ.சா.ஆ.6 ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

**குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது.**

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/திரு.P. காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.